Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பிருங்கிரிஷி முனிவரால் அருளப்பட்ட

வில்வ அஷ்டோத்ர சதநாமாவளி

(கிரந்தம் - நாகரம் - தமிழ் - தமிழ் விளக்கத்துடன்)

திருபுண்ணியத்தில் பங்கு கொண்ட சிவச்செல்வர்கள்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

Dall Mill • Trading Company • Maligai
ANNAVARTHANA
ANNAVARTHANA
Premium Quality

KUMAR
97914 99995
98429 77442

VINOTH
97914 99997

ANNAVARTHANA TRADING COMPANY
ANNAVARTHANA DHALL MILL
ANNAVARTHANA MALIGAI

E-mail : vino2vino2@gmail.com, Web : www.annavarthana.com
286, Suramangalam Main Road, Leigh Bazzar, Salem - 636 009.

VMGR.Ramesh Babu
98427 98888

Sri Uma Dall Mill
Pulses Merchant

sriumadallmill@gmail.com
261/7, Gorikadu, Suramangalam Main Road, Salem - 636009.

P.Kumar
Managing Partner
+919443050696

SREE POORNA CONSTRUCTIONS

No. 85-C/1, Valluvar Street,
S.S.Colony, Madurai - 625 010.
psk.poorna@gmail.com

Sitheswaran
9890629469

Shivamurugan
9890419669
9372323669

M.JAYARAJAN

M.JAYARAJAN
CANVASSING AGENT

"Nadar Bhavanam" 72/81, Bhavani Peth, Solapur - 413 002. (Maharashtra)
Phone : Office : 2323669 / 2325169 / 3295849. Residence : 2623056
E-mail : 1shivanadar@gmail.com

உ

ஸ்வரை-சரஸை ஸமேத கணபதி துணை

𑌶𑍍𑌰𑍀 𑌬𑌿𑌲𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌨𑌾𑌮𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌮𑍍 ॥

बिल्वाशटोत्र सदनाम स्तोत्रम

பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

(க்ரந்தம்–தேவநாகரி–தமிழ்–தமிழுரையும்)



இறைவனால் அருளப்பட்ட **சித்தம் சிவமயம்** ஞானதான அறக்கட்டளை

மதுரை

சார்வரி-ஹூ, ஆனி-மீ 2020

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் விபரங்கள்

நூல் பெயர்	: பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்
நூலின் வகை	: சைவசமயம் / துதி நூல்
©	: சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
முதற் பதிப்பு	: சார்வரி-ஷ ஆனி-மீ 2020
நூலின் அளவு	: 1/8 டெம்மி
பக்கங்கள்	: 124+20=144
தாள்	: 18.6 கி.கி. மேப்லித்தோ
எழுத்து	: 12 புள்ளிகள்
படிகள்	: 1000
கிடைக்குமிடங்கள்	: சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை மூவேந்தர் நகர் 2-வது வீதி, விஸ்வநாதபுரம், மதுரை - 625 014. செல்லிடப்பேசி : 98423 35085. 99521 58359, 98431 31353 Email ID : gnanathaanam@gmail.com சிவ.கணேசன், 'சிவநிதி சுதன் இல்லம்' 107, வடக்கு சற்குண வீதி, (சிவன்கோவில் அருகில்) நாகர்கோவில்-629 002. போன் : 98942-95295
நூலின் விலை	: நூலினைப் பெற்று, படித்து உணர்வதும், அதன்படி நடப்பதும், ஸ்ரீபார்வதி பரமேஸ்வரனின் திருவருளைப் பெற முயற்சிப்பதும் உண்மை விலை
நூல் அமைப்பு	: ஸ்ரீகணநாத நாயனார் நூலகம் 39/22, கிருஷ்ணாபுரம் முதல்தெரு, திருச்சிராப்பள்ளி-620 008. Cell : 99528 06121, 63807 29455 Email : gnanam.tcy@gmail.com
அச்சாக்கம்	: இராம்குமார் பிரிண்டர்ஸ், சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417, செல்: 98949 08437

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஶ்ரீ கணேசாய நம:

பொருளடக்கம்

1.	சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை அறிமுகமும், பணிகளும்	4
2.	முன்னுரை	5
3.	பதிப்பாளரின் நன்றியுரை	16
4.	ப்ருங்கிரிடியின் வரலாறு சுருக்கம்	19
5.	பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம்	20

இதுவரை எமது வெளியீடுகள்

1. சிவகீதை
2. சிவரஹஸ்யம் - முதலம்சம்
3. சிவரஹஸ்யம் - இரண்டாம் அம்சம்
4. சிவரஹஸ்யம் - மூன்றாம் அம்சம் - பூர்வபாகம்
5. திருவாட்போக்கிப் புராண வசனச் சுருக்கம்
6. பில்வஅஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம் (கிரந்தம் - நாகரம் - தமிழ் / தமிழ் உரையுடன்)

எங்களது வெளியீடுகளைப் பார்க்கவும், பெறவும் எமது முகநூல் பக்கமான (www.facebook.com / siththamsivamayam-ஐ பார்வையிடலாம். சிவஞானதானத்தில் சிவபுண்ணியத்தில் பங்குபெற விரும்புவோர் கீழ்க்கண்ட கணக்கில் பணம் அனுப்பலாம்.

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
Bank : Tamilnad Mercantile Bank Ltd.
Branch : Madurai Main
C/Ac. No. : 002100019741975
IFSC Code : TMBL0000002

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
சிவமயம்

இறைவனால் அருளப்பட்ட
சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை

மூவேந்தர் நகர் 2–வது வீதி, விஸ்வநாதபுரம், மதுரை–14.
e-mail id : gnanathaanam@gmail.com

அறிமுகமும் - பணிகளும்

R.செந்தில்குமார்-நிறுவனர்-தலைவர், 98423 35085

S.ஆனந்த், 98431 31353
மேலாண்மை அறங்காவலர்
ஞானதான அறக்கட்டளை
சைவசமயம் சம்பந்தமான பழைய நூல்களை மறுபதிப்புச் செய்து ஞானதானமாக வழங்குதல்.

V.வெங்கட்ராமன், 99521 58359
மேலாண்மை அறங்காவலர்
அன்னதான
வஸ்திரதான அறக்கட்டளை

திருமதி. செல்வி செந்தில்குமார், மேலாண்மை அறங்காவலர்
பொதுநல அபிவிருத்தி அறக்கட்டளை

சிவாலயங்களுக்கு அபிஷேகம், பூஜைப்பொருட்கள் கொடுத்தல்
பசு விபூதி, ருத்திராக்க மணி கொடுத்தல், வில்வக் கன்றுகள் கொடுத்தல்,
தலவிருட்சங்கள் வைக்க உதவுதல்,
விபூதி வைக்கும் வில்வ ஓடு கொடுத்தல் மற்றும் பல...

கௌரவ ஆலோசகர்கள் :
சிவ. பொன்.முத்துவிநாயகம் ஓதுவார்,
சிவ. சு.அனந்தசுப்பு, B. கார்த்திக்ராமர், TRS. ரமேஷ்கண்ணன்,
J. சிவலிங்கம், M.சுகுமார், திருமதி. பிரபாவதி சுகுமார்,
கைலைமணி சசிகலா, G.நம்பிராஜன்,
B.சரவணஈஸ்வரன், M.மகேஷ்குமார்

அறங்காவலர்கள் :
S. இராஜமாணிக்கம், R. குணசுந்தரி,
A. மலர்மதி, T.R. இராமதாஸ்,
G. நெடுஞ்செழியன், S. கற்குவேல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை

முன்னுரை

அருள்மிகு சுந்தரேஸ்வரர் உடனமர் அருள்தரு மீனாட்சியம்மை முன்னிலையில் அதிசயக் கூத்தன் கூத்தாடும் வெள்ளியம்பல சபையில் கூடியிருக்கும் சிவச்செல்வர்கள் அனைவரையும் பணிந்து வணங்குகிறேன்.

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளையின் மூலம் வலிமையான சிவஞான விஷயங்களை எளிய முறையில் மக்கள் அறியும் வகையில் புத்தகங்களை வண்ணப் படங்களுடனும் தமிழ் விளக்கத்துடனும் ஞானதானமாக வெளியிடுவதனையே முழுமுதற் நோக்கமாக கொண்டுள்ளது.

குரு வடிவில் இறைவன்

'எம்மை எதுவாகக் கருதி வழிபடுகிறீர்களோ யாம் அதுவாகவே இருந்து அனைத்து நன்மைகளையும் வழங்குகிறோம் (அப்படியே ஆகட்டும்)' என்ற ரிபுகீதையின் வாக்கியத்திற்கு நிலைப்பாடாக வாழ்ந்தவர், 'சாநித்யகுரு' 'கார்வார்' 'பூஜ்யஸ்ரீ புஷ்பவிநாயகம் ஆண்டவர்' அடியேனதுமுதல் குருஆவார். சிந்தையில் சிவஞானத்தை ஊற்றி வளர்த்த அவரது உபதேசங்களில் சிவகீதை, குருகீதை, ரிபுகீதை, திருமூலரின் திருமந்திரம் ஆகியன முக்கிய இடம் வகித்தன. தீட்சைகள் பல அளித்து, செயல்முறை பயிற்சியாக ஆத்மார்த்த பூஜைக்கு பயிற்சி அளித்த அவரே அடியேனை குகானந்த குருபீடத்தின் ஞானதான அறக்கட்டளைகளுக்கு ஸ்ரீ குருவாக பயிற்சி கொடுத்தவர்.

ஆகஸ்டு 15, 2007-ல் விருதுநகரில் நடைபெற்ற மகா மகேசுவர பூஜையில்தான் கார்வார் பூஜ்யஸ்ரீ புஷ்பவிநாயக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆண்டவர் அவர்களை R.செந்தில்குமார் ஆகிய அடியேன் சந்தித்தேன். அவர்களின் அவதாரத் திருநாள் ஆகஸ்டு 15 ஆகும். அவர் காலத்துக்குப் பின் ''சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை'' இறைவனால் அருளப்பட்ட நேரத்தில் எங்களின் நோக்கத்தினை அறிந்து எங்களை அழைத்து ஆசியளித்த செங்கோல் ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்களை அடியேன் சந்தித்தது ஆகஸ்டு 15/2017 அன்று. அவர்களின் அவதாரத் திருநாளும் ஆகஸ்டு 15.

வழிவழியாய் குருமரபு எங்களை ஆட்கொண்ட விதம் இறைவன் அருளியதே!, குருவடிவாய் வந்து எங்களை ஆட்கொண்ட இறைவனுக்கு அவதாரத் திருநாளாகிய ஆகஸ்டு 15, 2018 அன்று முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. அடியேனது வாழ்வின் ஆன்மீக அருள் அனுபவங்களை ஏற்படுத்திய அனைத்து குருமார்களுக்கும் அடியேனது வணக்கங்கள்.

''இறைவனால் அருளப்பட்ட *சித்தம் சிவமயம் அறக்கட்டளைகள்*''

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் அறக்கட்டளைகள் என்பது ஒரு வார்த்தை அலங்காரத்திற்காக சொல்லப்பட்ட சொல் அல்ல. அந்த இறைவனது அருள்ஆற்றலை ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நிகழ்விலும் அவனும் உணர்த்திக் கொண்டே இருக்கிறான், நாங்களும் உணர்ந்துகொண்டே இருக்கின்றோம். இவற்றில் சில உங்கள் முன்.

பல அதிசயங்களும் ஆற்றல்களும் கொண்டதே இந்த ஆலவாய் (எ) மதுரை. அவற்றுள் ஒன்றுதான் பஞ்சபூத ஸ்தலங்களை ஒரே நட்சத்திரத்தில் வழிபட ஏதுவாக அமைந்ததே மதுரையின் சிறப்புகளில் ஒன்று. மதுரையின் பஞ்சபூத ஸ்தலங்களின் ஸ்தல புராணங்கள், ஸ்தல சிறப்புகள், வழிபாட்டு பலன்களை தொகுத்து 'வளம் பல நல்கும் மதுரையின் பஞ்சபூத ஸ்தலங்கள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட எண்ணியிருந்தோம்.

இந்த காலகட்டத்தில் சாநித்திய குருவின் வாய்மொழி உபதேசமாக கேட்கப்பட்டு அடியேன் பலருக்கும் சொல்லிவந்த சிவகீதை, ரிபுகீதை உபதேசங்களை அறிந்திருந்த அன்பர்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒருவரான திருமதி. பிரபாசுகுமார் அவர்கள் சிவகீதை நூல் வடிவில் வெளிவந்ததை தெரிவித்து அந்த நூலை பரிசாக அளித்தார்கள்.

''கொடுத்தால் குறைவது பொருள்
கொடுத்தால் பெருகுவது அருள்ஞானம்''

இந்த சிவகீதை மூலநூலினை தேடும் பொழுது 1886ம் ஆண்டு எழுதி 1906-ம் ஆண்டு வெளிவந்த மருவூர், பிரம்மஸ்ரீ கணேச சாஸ்திரிகள் எழுதிய உரை நூலே தொன்மையானதாகவும், சிறப்பானதாகவும் திருச்சிராப்பள்ளி சிவத்திரு. மு. ஜயக்குமார் அவர்கள் மூலம் அறியப்பெற்றோம். மூல கிரந்த ஸ்லோகத்திற்கு தமிழ் வியாக்யானமும் பல்வேறு உபநிடத புராண வேத மேற்காட்டுதலுடன் சிறப்பாக தமிழுரை செய்திருந்தார்கள். அந்த மூலநூல் நகலை சென்னைவாழ் சிவத்திரு. J. கார்த்திக் அவர்களால் கிடைக்கப்பெற்றோம்.

இந்த நிகழ்வுகள் நமது அறிவுக்கும் ஆற்றல்களுக்கும் அப்பாற்பட்டு இறைவனின் அருளால் நிகழ்ந்தனவையே என்பதனை நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. அந்த நூலையே இறைவன் சித்தப்படி வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதலை 'பிரம்மஸ்ரீ' மருவூர் கணேச சாஸ்திரிகள் அவர்களின் வாரிசுகளிடம் திருச்சிராப்பள்ளி சிவத்திரு. மு. ஜயக்குமார் அவர்கள் பெற்றுத்தந்தார்கள்.

112 ஆண்டுகளுக்கு பின் மறுவெளியீடாக இறைவனின் சித்தப்படி வெளியிடப்பட்ட இந்த நூல் வெளியீடு தொடர்பாக சிவ.சு.அனந்தசுப்பு அவர்களின் மூலம், 'பெருங்குளம், செங்கோல் ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் தெரிந்துகொண்டு எங்களை அழைத்து ஆசி தந்தார்கள். மேலும் இந்த நூலை அவரது பொற்கரங்களினாலேயே வெளியிடுவதற்கான ஒப்புதலையும் தந்தார்கள். அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கம்.

சித்தம்சிவமயம் ஞானதான அறக்கட்டளையை வழி நடத்த இறைவன் நமக்கு அருளிய அருளாளர் ஆவார்கள். சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை இறைவனின் அருள்மழையில் நனைந்து நனைந்து அதிசயித்துக் கொண்டே இருக்கிறது. 'அதிசயங்களும் ஆற்றல்களும் இறைவனின் ஆசி வழியே' என்ற குருவின் வாக்கு மெய்ப்படுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தர்மச் சக்கரத்தின் சுழற்சி

11-02-2018 அன்று வெளியிடப்பட்ட சிவபெருமானால் இராமருக்கு உபதேசிக்கப்பட்ட ''சிவகீதை'' என்னும் நூலை பெருங்குளம் செங்கோல் ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களின் திருக்கரங்களினால் வெளியிட்டோம் என்பது உலகறிந்ததே.

இராமருக்கு சிவபெருமான் சிவகீதையினை உபதேசிக்கும் போது கேட்டுக் கொண்டிருந்த ஸ்கந்தப் பெருமான் அதை சனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த சனத்குமாரரின் சீடராகிய சத்திய ஞானதரிசினிகள் அவர்களை குருமுதல்வராகக் கொண்ட பரம்பரையில் வந்த 103-வது குருமகாசந்நிதானத்தின் திருக் கரங்களால் சிவகீதை வெளியிடப்பட்ட நிகழ்வானது தர்மச் சக்கரத்தின் சுழற்சியை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆதிரை அழகனின் அதிசய லீலை

இறைவன் இராமரின் பாசுபத விரதத்தினால் மகிழ்ந்து இராமருக்குக் காட்சி கொடுத்து சிவகீதையை உபதேசித்த தினம் வளர்பிறை சதுர்த்தசியுடன் கூடிய மார்கழிமாத திருவாதிரை நன்னாளில்...

இறைவனுக்கு மாதந்தோறும் திருவாதிரை நன்னாளில் ஆராதனையுடன் புஷ்பாஞ்சலி செய்யும் நமது சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளையினால் மார்கழிமாத திருவாதிரை நன்னாளில் சிவபெருமான் இராமருக்கு உபதேசித்த ''சிவகீதை'' நூலினை வெளியிட வாய்ப்பு நல்கியது இறைவனின் லீலைகள் தானே!!

15-08-2018 அன்று நடந்த முப்பெரும் விழா நிகழ்வுகள்

1. குரு ஜெயந்தி விழா - செங்கோல் ஆதீனம் குருமஹா சந்நிதானத்திற்கு பாதபூஜை செய்து அருளாசி பெறுதல்.
2. நூல் வெளியீட்டு விழா -
   - ★ சிவரகசியம் முதலாம் அம்சம் - மஹேஸம் - நூல் வெளியீடு
   - ★ சிவகீதை - இரண்டாம் பதிப்பு - நூல் வெளியீடு
   - ★ செங்கோல் ஆதீனச் சிறப்பு - வரலாறு நூல் வெளியீடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. அறக்கட்டளையின் ஆண்டு விழா

செயலரின் ஆண்டறிக்கை வாசித்தல்

ஞானதானம், அன்னதானம், பொதுநலம் என சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவினை, திருப்பரங்குன்றம் 'ஸ்கந்தகுரு வித்யாலயம்' நிறுவனர், முதல்வர் சிவஸ்ரீ இராஜாபட்டர் அவர்கள் தலைமை வகிக்க, ஓதுவாமூர்த்தி திரு.பொன்.முத்துவிநாயகம் அவர்கள் வரவேற்பு நல்க, அறுபத்துமூவர் மாத இதழாசிரியர் 'தத்புருஷ தேசிகர் திரு.நாராயணன் ஐயா மற்றும் 'சிவாகம பாஸ்கர' சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம் அவர்களும் சிறப்புரை யாற்ற நிறுவனத் தலைவரின் ஏற்புரையுடனும் திரு.அனந்தசுப்பு அவர்களின் நன்றியுரையுடனும் விழா நிறைவடைந்தது.

சித்தம் சிவமயம் பொதுநல அபிவிருத்தி அறக்கட்டளை சார்பாக வில்வமரக்கன்று, விபூதி வைக்கும் வில்வக் குடுவை, செம்புக் கம்பியால் இணைத்த ருத்ராட்சம், கண்டமணி மற்றும் தூய திருநீறு ஆகியன அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

மதுரை சொக்கர் குடில் அறக்கட்டளை துணையுடன் சித்தம் சிவமயம் அன்னவஸ்திர தான அறக்கட்டளை சார்பாகவும் அன்ன வஸ்திர தானமும் சிறப்பாக நடைபெற்றது.

எமது அடுத்த வெளியீடுகள்

1. **சிவகீதை :** அடுத்தடுத்து ஆயிரம் பதிப்புகளாக வெளிவந்து கொண்டேயிருக்கும். அதில் கருத்துக்களை தெளிவுபடுத்தத் தேவையான வண்ணப்படங்களுடனும், மூலம் க்ரந்தம்+ தேவநாகரி+தமிழ் எழுத்துக்களையும் அதற்கான தமிழ் உரையும் சேர்த்து வெளியிடப்படும்.

2. **விரஜா தீட்சை :** பத்ம புராணத்திலுள்ள வேதசார சிவ சகஸ்ர நாமம், அகத்தியர் இராமருக்கு அருளிய விரஜா தீட்சை விளக்கத்துடன் வெளியிடப்படும்.

3. **சிவபராக்கிரமம் (1-64):** ஸ்ரீ ஸ்காந்த மகா புராணத்தில் சநற்குமார சங்கிதையில் மூர்த்திமான்மியம் உரைத்த சருக்கத்தில் திருநந்திதேவர் சநற்குமார முனிவர்க்குக் கூறியதாகவுள்ள சிவபெருமானின் சிவபராக்கிரமம் என்னும் 64 வடிவங்கள் பற்றி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரிவான தத்துவ விளக்கத்துடனும், பல வண்ணப்படங்களுடனும் வரலாறுகளுடனும் தனித்தனி (64) நூல்களாக வெளியிடுதல்.

4. வளம் பல நல்கும் மதுரை பஞ்சபூத ஸ்தலங்கள்.

மஹாஇதிகாசமாகிய சிவரகசியம் - ஓர் அறிமுகம்

மஹேதிஹாஸமாகிய சிவரஹஸ்யம் பூர்வம் பரமசிவனால் உமாதேவியார்க்கு மஹா கைலாஸத்திலும், முருகக்கடவுளால் மஹாதபஸ்வியாகிய ஜைகிஷவ்ய முநிவர்க்கு ஸ்கந்தகிரியிலும், அதிரஹஸ்யமாய் உபதேசிக்கப்பட்டது. பின்னர் அது, முருகக் கடவுளால் நந்திதேவருக்கும், அவர் தம்மை வழிபட்ட நாராயண மூர்த்திக்கும், அவர் தமது புதல்வராகிய பிரம்மதேவருக்கும், அவர் தமது புதல்வர்களாகிய ஸநகாதியர்களுக்கும், அவர் நாரத மஹாமுனிவருக்கும், அவர் வியாஸமுனிவருக்கும், அவர் சூதபௌராணிகர்க்கும் முறையே உபதேசிப்ப நிலவுலகில் வந்து நிலவியது.

இப்பரம இதிஹாஸம், ஒரு லட்சத்து இருபது ஆயிரத்திற்கு (1,20,000) மேற்கொண்ட கிரந்த ஸங்கியை உடையதாயும், ஸஹஸ்ரஅத்யாயி என்னும் ஆயிரம் அத்தியாயங்களாலான மஹேஸம், பவம், ஹாரம், சிவம், பர்க்கம், சங்கரம், உக்ரம், பீமம், ஸதாசிவம், ஈஸ்வரம், மஹாதேவம், ஈஸம் எனப்பெயரிய பன்னிரண்டு அம்சங்களை உடையதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. *(ஸங்கியை - எண்ணிக்கை).*

5. **சிவரகசியம் (1-12) :** மஹா இதிகாசமாகிய சிவரகசியம் பன்னிரண்டு அம்சங்களையும் தனித்தனியாக (12) வெளியிட உள்ளோம்.

முதல் அம்சம் - 'மஹேசம்', இரண்டாம் அம்சம் - 'பவம்', மூன்றாம் அம்சம் - 'ஹாரம்'-பூர்வபாகம் வெளியிட்டுள்ளோம்.

இதன் மீதமுள்ள அம்சங்களுக்கான தமிழ் உரை தமிழ் போற்றும் சைவஉலகிற்கு கிடைக்கவில்லை. சைவ சமயத்தினர் அனைவரின் வேண்டுதலுக்கு இணங்க சிவபெருமானின் கருணையால் நிச்சயம் கிடைக்கும்.

6. **மாஹேஸ்வர சூத்திரம் :** பேரூழிக் காலத்திற்குப் பிறகு இறைவன் மீண்டும் உலகத்தை சிருஷ்டிக்கும் பொழுது தமது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

டமருகத்தை அதீதமாக இசைக்க அதிலிருந்து தோன்றிய பதினான்கு ஒலி சூத்திரங்களே மொழி இலக்கணத்திற்கு மூலமாக அமைந்தது. "ஸ்ரீ மாஹேஸ்வர சூத்திரம்". இந்நூலுக்கு நந்தியம்பெருமான் எழுதிய விளக்கம் - 'ஸ்ரீநந்திகேசுவர காசிகை', - இந்நூலிற்கு உபமன்யுமுனிவர் எழுதிய விளக்கம் - 'தத்துவவிமர்சினி வியாக்கியானம்;' இதற்கு சென்னை "சிவஸ்ரீ S.P. சபாரத்னம் சிவாசாரியார் எழுதிய தமிழ் விளக்கம்" இந்நூலினைப் பற்றி ஸ்ரீசிவாகமம்வல்ல பெரியோர்களின் கட்டுரைகளுடன் சிறப்பித்து வெளியிட உள்ளோம்.

7. க்ரந்தலிபி அரிச்சுவடி : மகாதேவ பாஷையான ஸம்ஸ்கிருதம், க்ரந்தலிபியில் எவ்வாறு படிப்பது, எழுதுவது என சாமானியர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் வெளியிட உள்ளோம்.

"யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே".

என்ற திருமூலரின் வரிகளுக்கு ஏற்ப இறைத்தன்மையை பற்றி பேசப்பேச எழுதஎழுத நினைக்கநினைக்க இறைவன் நம்மூலம் வெளிப்பட்டு நம்உயிர் இறைத்தன்மை பெற்று வருகிறது.

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளையினரின் அன்பான வேண்டுகோள் :

"வாரீர்! ஊர் கூடித் தேர் இழுப்போம் வாரீர்!!
வாரீர்! சிவனருள் பெறுவோம் வாரீர்!!"

இந்தச் சிவபுண்ணியங்களை வழி நடத்திட, சைவசமயப் பெரியோர்கள் தங்கள் மேலான நல்லாசிகளையும், நல்லாதரவையும் வழங்கி உதவிட வேண்டுகிறோம்.

இந்தச் சிவநூல்கள் வெளியீட்டுச் சிவபுண்ணியங்களில் பங்கு பெற விருப்பமுள்ள அன்பர்கள் எங்களோடு இணைந்து இந்த சிவ புண்ணியங்களுக்கு (ஞானதானத்திற்கு)த் தேவையான பொருள் உதவிகளை தானமாகத் தந்துதவலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரைபடக் கலைஞர்கள், DTP டிசைனர்கள், தங்கள் திறமையை தானமாகத் தந்து உதவலாம்.

ஏற்போர் இணைந்து வாருங்கள், அதுவே இறைவனின் ஆசியைப் பெற எளிய வழியாம்.

11-2-2018 அன்று வெளியிடப்பட்ட சிவகீதை நூல் 1000 பிரதிகளும் தானமாகவே வழங்கப்பட்டுவிட்டது. 15-08-2018 அன்று சிவகீதை நூலினை மறுபதிப்புச் செய்து வெளியிட்டும், சிவரகசியம் முதலம்சம் நூல் மீள்பதிப்புச் செய்தும் அன்பர்களுக்கு வழங்கிக் கொண்டுள்ளோம்.

இனிவரும் காலங்களில் மேலும் பல நூல்கள் (80) எண்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் தனித்தனியாக வெளியிடயிருக்கும் நமது நோக்கத்தினை நிறைவேற்ற தேவையான நிதியினைத் திரட்டவும், தாங்களும் இந்தச் சிவஞான தானத்தில் சிவபுண்ணியத்தில் பங்கு கொள்ளவும் அழைக்கிறோம். எனவே அறக்கட்டளைக்கு குறைந்தபட்ச நன்கொடையினை அளித்து நூல்களை தானமாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறக்கட்டளை நிர்வாகிகளினால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நன்றியுரை :

இந்நூலிற்கான க்ரந்தலிபி டைப்செய்து உதவிய எங்கள் வழிகாட்டி திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், ஆகம அத்யாபகர் சிவஸ்ரீ க.கார்த்திகேயசிவம் ஐயா அவர்களுக்கும், மற்றும் பிழைகள் திருத்தியுதவிய மதுரை ஸ்ரீராம்சர்மா அவர்களுக்கும், இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய திருச்சிராப்பள்ளி-குமாரவயலூர்-ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அர்ச்சகர் - சிவஸ்ரீ : அகோரசிவாச்சார்யர் அவர்களுக்கும் வணக்கங்களும், நன்றிகளும்.

இந்த நூலினை வெளியிட பொருளுதவி நல்கிய அனைவருக்கும் நன்றிகள் பல.

இந்நூலினை பதிப்பித்துக் கொடுத்த நமது அறக்கட்டளையின் நூல்கள் பதிப்பாளர் திருச்சிராப்பள்ளி, 'ஸ்ரீகணநாதநாயனார் நூலகம்' - போற்றுநர் - அகோரசிவகணன் மு.ஜயக்குமார் அவர்களுக்கும், இந்த அற்புதநூலை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த திருச்சிராப்பள்ளி, இராம்குமார் பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'சிவாகம ஸித்தாந்த ரத்நம்',
'சிவாகம சாஸ்த்ர கலாநிதி',
'சிவாகம ப்ரதிஷ்டா பூஷணம்',
'ஸித்தாந்த திலகம்'
சிவஸ்ரீ அகோர சிவாச்சார்ய:
(கு.கார்த்திக் மீனாட்சி சுந்தரம்,M.A.,)
அர்ச்சகர், ஸ்ரீசுப்ரமண்ய ஸ்வாமி திருக்கோயில்,
குமார வயலூர், திருச்சிராப்பள்ளி-620 102.

ஆசியுரை

"ஸர்வ ஞான ப்ரதம் சம்பும் ஸர்வாஞான விகாதகம்।
காயேந மநஸா வாசா வித்யா பீடாஸ்ரயம் பஜே॥"

ஸ்ரீமத் சுந்தரர் - சேரமான் நாயனார் பூலோகம் கடந்து கயிலை வரும் வழியில், மலையில் பாடியவைகள் ஏழிசைப்பதிகம் - ஞானஉலா. வருணன்-மாசாத்தனார் அஞ்சைக்களம் மற்றும் பிடவூரில் வெளிப்படுத்திய செய்தியை பெரியபுராணம்-வெள்ளானைச் சருக்கத்தில் படித்து சிவாநுக்ரஹம் பெறுகின்றோம். மேலுலகில் இருவர்பாடி அருளியதை இருவர்தந்து உதவியதால் சைவ உலகமே பயன்பெற்றது.

அதுபோல, வடக்குப்பட்டு த.சுப்பிரமணியப்பிள்ளை, தமிழ்த்தாத்தா உ.வே.சா., அப்பாய் செட்டியார் என சான்றோர்கள் பலரும் சிரமப்பட்டு அத்யத்புதமான நூல்களை காப்பாற்றித் தந்துள்ளனர். அரிய க்ரந்தங்களை சந்ததிகளுக்கு காத்து தருவது, தேசம் எனும் வ்ருக்ஷத்தில் வேர் என இருக்கும் மூலதர்மத்தில் சிவசேவை எனும் ஜலம் வார்த்தல் மஹாபுண்ணியமாகும்.

இறைவிக்ரஹங்களின் கரங்களே புத்தகம் தாங்கி உள்ளதைப் பார்க்கிறோம்.

"திவாகரேச ஆத்மநிச லிங்கே வஹ்நௌ குரௌ ததா।
புஸ்தகேச ஸமாக்யதம் ஷட்ஸ்தாநேஷு சிவார்ச்சநம்॥"

புத்தகத்தில் ஸ்வாமியும், அட்டையில் உமையும் உள்ளனர். நித்யமும் புத்தகத்தில் சிவவழிபாடு உண்டு. தரையில் வைக்கக் கூடாது என்று சாஸ்திரமும் உண்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பக்ந ப்ருஷ்ட கடி க்ரீவ: ஸ்தப்த பாஹூரதோ முக:।
கஷ்டேண காரயேத் க்ரந்தம் யத்நேந பரிபாலயேது॥"

என்பது சைவ குருநாதர் ஸ்ரீமத் அகோர சிவாச்சார்ய ஸ்வாமிகளின் உபதேசமாகும்.

விதேச விக்ஞானத்தை தன்னுள் தாங்கி சுதேச மெய்ஞானத்தை ஜகத்திற்கே அன்னை பாரதம் வழங்கும். உலகத்தை வழி நடத்தும் என்றார் ஓர் மஹான்.

"புராண மித்யேவ நஸாது ஸர்வம் நசாபி காவியம் நவமித்யவத்யம்।
ஸந்த: பரீக்ஷ்யான்யதரத் பஜந்தே மூட:பர: ப்ரத்யயநேயபுத்தி॥"

பழமை-புதுமை பரீட்சித்தே எது சரி என ஏற்கவும் தவிர்க்கவும் வேண்டும். அறங்கள் பல. அதில் மிக உயர்வானவை 32 அறங்கள். அன்னை காமாக்ஷி காஞ்சியில் செய்து அருளினாள். காஞ்சிப் புராணம்-தழுவக்குழைந்த படலம் - 30-ஆவது அறம். வேத வாய்மைச் சைவ நூல் (சிவசம்பந்தமான) புராணம் நல்கல்.

ஸ்ரீ சொக்கநாதப் பெருமானின் பேரருளால் ஸ்ரீமீனாக்ஷி மைந்தர்களான, மதுரை, சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளையினர் மஹோன்னதமான இச்சிவப்பணியை ஞானத்தில் கிரியை என செய்து வருகின்றனர். இது போற்றி பாராட்டுதலுக்குரிய பதி புண்ணியம்.

"இயன்றன இயற்றினாரும் அனைத்தையும் இயற்றினாரும் பயன்பல சிவலோகத்தில் பற்றுவர்".

சிவதர்மோத்ரம் - அறத்தின் பயன்

"ஆஸமாப்தேஸ்து ஸம்ரக்ஷேத் வித்யா தாந பலம்லபேத்।
மூல்யேந காரயேத்வாத ததேவ பல மஸ்துதே॥"

சிவாகமம் சிவவித்யை ஆயுள் முழுதும் காப்பதும், அதற்கு தொகை தருவதும் ஒரே பலனையே தரும்.

"லேகணம் சிவ வித்யாயா: ப்ரதானம் புஸ்தகஸ்யது
சிவபக்தி இதி ப்ரோக்தா சிவ சாஸ்த்ர பராயணை:।
சிவபுஸ்தக நிக்ஷேப ஸ்தாநா நிர்மாண மாஸ்திகா:
சிவபக்தி இதி ப்ரோக்தா சிவ த்ருஷ்டி பராயணை:॥"

சைவ நூல்களைத் தருதலும், சைவ புஸ்தக சாலை கட்ட உதவுதலும் சிவபக்தியாகும். சூதஸம்ஹிதை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவத்திரு. மு.ஜயக்குமார், 'ஸ்வாமி கார்யேஷுச ப்ராணம்' என சைவ தர்மம் காக்க வாழ்பவர். திரு.இரா.செந்தில்குமார் ஐயா, திரு.ஆனந்த்ஜயா, இருவரும் மண் பயனுற வேண்டும் என ஒர் எண்ணத்தில் பயணிப்பவர்கள். சிவகீதை, சிவரஹஸ்யம் மற்றும் பல நூல்கள் வெளியிட்டுள்ளனர். இன்னும் பதி நூல்களை ஸ்ரீவயலூர் வள்ளல் ஆசியுடன் தருவார்கள். வைதிக சைவ பெருமக்கள் அனைவரும் இஹபரஸௌபாக்கியம் பெற்று என்றென்றும் சிவம் பெருக்கும் சீலத்தில் வாழ நித்தலும் கந்தரை கைதொழுது வாழ்த்துகின்றேன்.

ஓம் முருகா, சிவமஸ்து

"யதா சிவஸ்ய நைவாந் ஸ்ஸம்பூர்ணஸ்ய மஹாத்மந:।
ததா வித்யாப்ரதாநஸ்ய நாந்தஸ் ஸர்வ குணாத்மந:।।"

மஹாலிங்கப் பெருமானைப் போலவே சிவ வித்யைக்கு என்றுமே அழிவில்லை.

"சிவாந்த குணம் ஐஸ்வர்யம் வித்யாதானஸ்ய தத்பலம்।
இஹகீர்த்தி: ஸ்ரீயோ ப்ராஹ்மி ப்ரக்ஞா காந்திம்தநம் சுகம்।।"

சிவ நூல்களை தானம் செய்தால் ஐஸ்வர்யம், சிவனாரை அடையும் குணம், புகழ், கல்வி, லட்சுமிகடாக்ஷம், ஒளி, பொருட்செல்வம் கிடைக்கும்.

"யஸ்ய ராஷ்ட்ரே சிவஞாந வ்யாக்யாநம் வர்தேதே த்விஜா:।
ஸ ராஜா வர்ததே ஸ ராஜாதிப ஊர்ஜித:।।"

எந்த அரசாங்கத்தில் சிவாகம விரிவுரை புத்தகம் உள்ளதோ அந்த ராஜாவும் அரசும் வளர்வதாகும். - ஸ்ரீமத்சிவாகமம்.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்கும் உலகமெல்லாம்.

-கந்தபுராணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

பதிப்பாளரின் நன்றியுரை

ஸ்ரீ கணநாத நாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி.
39/22, கிருஷ்ணாபுரம் முதல்தெரு, திருச்சிராப்பள்ளி-620 008.
செல்லிடப்பேசி : 99528 06121, 63807 29455.
Email :gnanam.tcy@gmail.com

மெய்யன்புடையீர், வணக்கம். ''பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம்'' என்கிற இவ்வற்புத நூலை வெளியிட வைத்த திருவருளுக்கும் குருவருளுக்கும் முதற்கண் அடியேனது மனம் மெய் மொழிகளாலான வணக்கங்களையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

இந்த நூலினை பதிப்பிக்கும் சிவபுண்ணியச் செயலுக்கு பொருளுதவி தந்துதவிய அனைவருக்கும் எல்லாம்வல்ல பார்வதி பதியின் திருவருளால் மேன்மேலும் எல்லா நலங்களும் வளங்களும் கிடைத்திட பிரார்த்திக்கின்றேன்.

தற்போது க்ரந்தலிபி + நாகரலிபி தமிழ்எழுத்து + உரைநடை கொண்டதாக வெளியிடப்படுகிறது.

இந்நூலிற்கான க்ரந்தலிபி டைப்செய்து உதவிய எங்கள் வழிகாட்டி திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், ஆகம அத்யாபகர் சிவஸ்ரீ க.கார்த்திகேயசிவம் ஐயா அவர்களுக்கும், மற்றும் பிழைகள் திருத்தியுதவிய மதுரை திரு. ஸ்ரீராம்சர்மா அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய திருச்சிராப்பள்ளி - குமாரவயலூர் - ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அர்ச்சகர் - சிவஸ்ரீ : அகோர சிவாச்சார்யர் அவர்களுக்கும் வணக்கங்களும், நன்றிகளும்.

இந்த நூலினை வெளியிட பொருளுதவி நல்கிய அனைவருக்கும் நன்றிகள் பல.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த அரிய நூலினை பதிப்பித்துத் தருமாறு கேட்டுக் கொண்ட மதுரை, சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை நிறுவனர்- தலைவர் உயர்திரு. R.செந்தில்குமார், மேலாண்மை அறங்காவலர்கள் : உயர்திரு. S.ஆனந்த், உயர்திரு. V.வெங்கட்ராமன், திருமதி. செல்வி செந்தில்குமார், ஆகியோருக்கும் நமது நன்றிகள்.

இந்த ''பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம்'' நூலினைப் பெறும் அன்பர்கள் நூலினைப் படித்து உணர்ந்து தங்கள் மேலான எண்ணங்களை அடியேனுக்கு பகிர்ந்திட வேண்டுகிறேன். இந்நூலில் சில பாட பேதங்களும் உண்டு.

இதுபோல இன்னும் பல அரிய நூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிடவும், சிவபுண்ணியச் செயல்கள் செய்திடவும் அறக்கட்டளையினருக்கு துணைநிற்க வேண்டுமாய் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த அற்புதநூலை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த திருச்சிராப்பள்ளி, இராம்குமார் பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றிகள் தெரிவித்துக் கொள்கிறேன்.

புட்பவிதி நூலிலிருந்து - வில்வம்

பத்திரங்களுள் வில்வம் சிவசொரூபம்; வில்வமரத்தில் உள்ளமுட்கள் சக்தி சொரூபம்; கிளைகள் வேதம்; வேர் பதினொரு கோடி உருத்திரர்கள்; ஆதலின், வில்வமரத்தை வணங்குபவர்கள் தெய்வ வடிவத்தைப் பெறுவர்.

சிவபெருமானுக்கு வில்வம் ஒன்று சாத்தினால் சாலோக பதவியும், இரண்டு சாத்தினால் சாமீப பதவியும், மூன்று சாத்தினால் சாரூப பதவியும், நான்கு சாத்தினால் சாயுச்ச பதவியும் கிடைக்கும்.

நாள்தோறும் வில்வம் தவறாது சாத்திப் பூசை செய்பவர்கள், வில்வம் கிடையாவிடின், முன்னால் சாத்திய வில்வத்தையே எடுத்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூய நீராற் கழுவி மீளவும் சாத்தலாம். இவ்வாறு ஒரு மாதம் வரையில் சாத்தலாம். அதற்கு மேற்பட்ட நாள்களில் சாத்துதல் கூடாது.

வில்வத்தைப் பொன்னால் செய்து சாத்தினால், உண்மையான வில்வத்தைச் சாத்திய பயனில் பாதிப் பயன், உளதாகும். வெள்ளியால் செய்து சாத்தினால், பாதியிற் பாதிப் பயனும், பிற பொருள்களால் செய்து சாத்தினால், அதனிற் பாதிப் பயனும் கிடைக்கும்.

(வில்வத்திலேயே சிவனைப் பூசை செய்யலாம்; அவ்வாறு பூசை செய்யும் முறை இது என்று கூறுகின்றார்.) ஓர் ஆசனப் பலகைமேல் ஐந்து வில்வங்களை (நான்கு திசைகளிலும் நான்கும், நடுவில் ஒன்றுமாக) வைத்து, நடுவில் உள்ள வில்வத்தின் பக்கத்தில் ஒரு துளசியையும் வைத்து, வில்வ வடிவில் உள்ள சிவன் திருமாலுக்குரிய துளசி வடிவில் உள்ள சத்தியோடு கூடியிருப்பதாகப் பாவித்து,

விருப்பமான மலர்களைக் கொண்டு அருச்சித்து, வணங்கி வலம் வந்தவர்கள், தளர்ச்சியில்லாத பல போகங்களை நுகர்ந்து, ஒளி பொருந்திய விமானத்தில் ஏறிப் பல கோடி கற்றத்தாருடன் சிவலோகத்தை அடைந்து அங்குள்ள போகங்களைத் துய்த்து வாழ்ந்து, பின்பு முத்தியை அடைவார்கள்.

'வில்வம், கிளுவை விளா, வெண்ணொச்சி, மாவிலிங்கை' என்னும் இவை பஞ்ச வில்வமாகும். இவைகளை ஞாயிற்றுக் கிழமையில் வரும் பௌர்ணமியில் சிவபெருமானுடைய திருவடிகளில் பொருந்தச் சாத்தினால், சொல்லுதற்கரிய மெய்ஞ்ஞானம் உண்டாகும்.

வில்வம் எடுக்கலாகாத நாட்கள் : மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, சதுர்த்தசி, அட்டமி, நவமி ஆகிய திதிகள் இந்நாட்களில் வில்வத்தை மரத்திலிருந்து எடுத்தல் கூடாது. எடுத்தால் நரகத்தை அடைவார்கள்.

— *அடியார்க்கடியேன்,*

அகோர சிவகணன் மு. ஜயக்குமார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ருங்கிரிடியின் வரலாறு சுருக்கம்

பில்வாரண்யத்தில் மதங்கர் என்னும் மாமுனிவரின் புதல்வர்கள் பிருங்கி, பிருங்கிரிடி என இருவர். அவர்களுள் முதல்வர் சிவனையே வழிபடுவர். சக்தியை திரும்பியும் பார்ப்பதில்லை. அர்த்தநாரி ஸ்வரூபியான சிவனை வலம் வர வண்டாக சிவன் காலில் நுழைந்து வலம் வருவார். இவருடைய சகோதரியும் மதங்கரின் புதல்வியுமான அம்பிகை இதைக்கண்டு, அவரைத் திருத்த, வலிமை குன்றியவராக ஆகிவிட்டார். அதைக் கண்டு சிவன் வருந்தி அவருக்கு மூன்றாவது கால் ஒன்று கொடுத்து வலம் வர ஏற்பாடு செய்தார். அப்படியும் சிலநாள் கழித்து சுற்றிவர இயலாமல் சிவனே என கிடந்துவிட்டார். இதைக் கண்டு கருணை உள்ளம் படைத்த அம்பிகை சிவனை விட சக்தியே சிறந்தது என்று அருளி ஆட்கொண்டார்.

பிருங்கிரிடியோயெனில் சிவனையும், சக்தியையும், சேர்த்தே வழிபட்டு சிவனருளால் பல நல்ல நூல்களை படைத்து பிருங்கிரிடி ஸம்ஹிதை என்ற பெயரில் உலகிற்கு வழங்கியுள்ளார். அவருடைய நூல்களில் ஒன்று இந்த பில்வாஷ்டோத்ர சதநாம ஸ்தோத்ரமாகும். எனவே இத் தோத்திரம் மிக மிகச் சிறந்தது என்பது இதன் பல சுருதியில் காணலாம்.

எல்லாம் ஸ்ரீ நடராஜர் கிருபை.



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம்

சிதம்பரம் - 'சதுஶ்ஶாஸ்த்ர சிரோமணி' 'பண்டித ராஜா'

ஸோமஸேது தீக்ஷிதர் அவர்கள்

(बिल भेदने பில பேதனே என்ற தாதுவினால் ஏற்பட்ட பில்வம் அல்லது வில்வம் என்கிற சொல், 'ஸகல பாபங்களையும் போக்கும் திறமை உள்ளது' என்ற பொருளைக் குறிக்கும்.

இது ஸாக்ஷாத் லக்ஷ்மி ஸ்வரூபம். ஒரு சமயம் லக்ஷ்மீதேவி விஷ்ணுவிடம் கோபம் கொண்டு பரமசிவனை நோக்கித் தவம் செய்தும் சிவன் அருள் கிட்டாததால் பில்வமரமாகி அதன் இலைகளால் சிவனை அர்ச்சித்து அதனால் மகிழ்ந்த சிவன் நேரில் வந்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மார்பகத்தில் இடையறாமல் தங்கி இருக்கும் பேற்றை லக்ஷ்மிக்கு அளித்து மறைந்தார் என்பது புராண வரலாறு.

இதனால்தான் பில்வமரத்திற்கு ஸ்ரீவிருக்ஷம் என்று பெயர். இதன் நிழலையும் இதன் இலைகளையும் காலால் மிதிக்கவும் தாண்டவும் கூடாது. கிளைகளை ஒடிக்கவும் மரத்தை வெட்டவும் வெட்டியதை அடுப்பில் எரியவைக்கவும் கூடாது. அப்படிச் செய்தால் செல்வம் குறையும்.

அமாவாசை, பௌர்ணமி, த்வாதசி, ஸோமவாரம், சிவராத்ரி முதலிய நாட்களிலும் நடுப்பகல் மாலை ஆகிய நேரங்களிலும் பில்வம் பறிக்கக் கூடாது. பில்வமரத்தில் கால் வைத்து ஏறாமல் ஏணி வைத்து ஏறிப் பறிக்கவேண்டும்.

இம் மரத்தின் கீழ் ஸ்தோத்ர பாராயணம் செய்தால் பயன் சீக்கிரத்தில் கிடைக்கும். திரிதலத்தில் மேல் தலம் சிவனாகவும், இடது தலம் பிர்மாவாகவும், வலது தலம் விஷ்ணுவாகவும், தண்டு சக்தியாகவும் கருதப்படுகிறது.

ஸோம வாரத்திலும், பிரதோஷத்திலும், அஷ்டமியிலும், சிவராத்திரியிலும், திருவாதிரையிலும், பசுமையான பூச்சிஅரிக்காத மூன்று தலங்களுடன் கூடிய வில்வத்தால் கீழ்க்காணும் மந்த்ரங்களைக்கூறி ஒவ்வொன்றாக அர்ச்சனை செய்தால் பரமசிவனுக்கு விசேஷ சந்தோஷம் உண்டாகும். அதனால் நாம் கோரிய பயன்களைப் பெறலாம்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌶𑍍𑌰𑍀 𑌬𑌿𑌲𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌨𑌾𑌮𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌮𑍍 ॥

बिल्वाष्टोत्र शतनाम स्तोत्रम्

பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

(1)

𑌤𑍍𑌰𑌿𑌦𑌲𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌕𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑍁𑌧𑌮𑍍 ।

𑌤𑍍𑌰𑌿𑌜𑌨𑍍𑌮 𑌪𑌾𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 1॥

त्रिदलं त्रिगुणाकारं त्रिणेत्रं च त्र्यायुधम्।

त्रिजन्म पापसंहारं एकबिल्वं शिवार्पणम्।। १

த்ரித^{3}லம் த்ரிகு^{3}ணாகாரம் த்ரினேத்ரம் ச த்ரியாயுத^{4}ம்।

த்ரிஜன்ம பாபஸம்ஹாரம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்பணம்।।

இதன் பொருள் : மூன்று தளங்களுடன் கூடியதும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண வடிவமானதும், முக்கண்ணனான பரமசிவனுக்கு ஸமமானதும், பால்ய கௌமார யௌவன என்னும் மூன்று அவஸ்தைகளைத் தவிர கிழத்தன்மையைக் கொடுக்காததாயும், முப்பிறவிகளிலுமுள்ள பாபங்களைப் போக்கடிக்கக் கூடியதாயும் உள்ள ஒரு பில்வத்தை சிவனுக்கு பக்தியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

2

𑌤𑍍𑌰𑌿𑌶𑌾𑌖𑍈𑌃 𑌬𑌿𑌲𑍍𑌵𑌪𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌅𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌰𑍈𑌃 𑌕𑍋𑌮𑌲𑍈𑌃 𑌶𑍁𑌭𑍈𑌃 ।
𑌤𑌵 𑌪𑍂𑌜𑌾𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 2॥

त्रिशाखैः बिल्वपत्रैश्च अच्छिद्रैः कोमलैः शुभैः ।
तव पूजां करिष्यामि एकबिल्वं शिवार्पणम् ॥ २

த்ரிஶாகை:[2]பி[3]ல்வபத்ரைஶ்ச அச்சி[2]த்[3]ரை: கோமலை: ஶுபை:[4]।
தவ பூஜாம் கரிஷ்யாமி ஏகபி[3]ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : மூன்று தளங்களுடன் கூடியதும், பூச்சி அரிக்கப்படாததும், அழகானதும், மங்களத்தை அளிக்கவல்லதுமான பில்வ இலைகளால் உமக்குப் பூஜை செய்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

③

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌹𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 3॥

सर्वत्रैलोक्यकर्तारं सवत्रैलोक्यपालनम्।
सर्वत्रैलोक्यहर्तारं एकबिल्वं शिवार्पणम् ॥ ३

ஸர்வத்ரைலோக்யகர்தாரம் ஸர்வத்ரைலோக்யபாலனம்।
ஸர்வத்ரைலோக்யஹர்தாரம் ஏகபி³ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : மூவுலகங்களையும் படைத்த பிரும்மரூபமாயும், மூவுலகங்களையும் காக்கும் விஷ்ணு ரூபமாயும், மூவுலகங்களையும் அழிக்கும் ருத்ர ரூபமாயும் உள்ள மூன்று தளத்துடன் கூடிய ஒரு மூவிதழ் பில்வத்தைச் சிவனுக்கு அர்ப்பணம் செய்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(4)

𑌨𑌾𑌗𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌵𑌲𑌯𑌂 𑌨𑌾𑌗𑌹𑌾𑌰𑍇𑌣 𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑌾𑌗𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 4॥

नागाधिराजवलयं नागहारेण भूषितम्।
नागकुण्डलसंयुक्तं एकबिल्वं शिवार्पणम् ॥ ४

நாகா³தி⁴ராஜவலயம் நாக³ஹாரேண பூ⁴ஷிதம்।
நாக³குண்ட³லஸம்யுக்தம் ஏகபி³ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) :ஆதிசேஷனை கங்கணமாகக் கொண்டவரும், வாசுகியை மாலையாக அணிந்தவரும், கம்பலஅச்வதரர்களைக் காதணியாகக் கொண்டவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(5)

𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌧𑌰𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌲𑍍𑌲𑌭𑌮𑍍 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 5॥

अक्षमालाधरं रुद्रं पार्वतीप्रियवल्लभम् ।
चन्द्रशेखरमीशानं एकबिल्वं शिवार्पणम् ॥ ५

அக்ஷமாலாத⁴ரம் ருத்³ரம்: பார்வதீப்ரியவல்லப⁴ம்।
சந்த்³ரஶேக²ரமீஶானம் ஏகபி³ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : ருத்திராக்ஷ மாலையை அணிந்தவரும், பார்வதியின் அன்புமிகுந்த கணவரும், சந்திரனைத் தலையில் அணியாகக் கொண்டவருமான பரமேசுவரனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(6)

𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌦𑌶𑌭𑍁𑌜𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌦𑍇𑌹𑌾𑌰𑍍𑌧𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌤𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 6॥

त्रिलोचनं दशभुजं दुर्गादेहार्ध धारिणम्।
विभूति अभ्यर्चितं देवं एकबिल्वं शिवार्पणम् ॥ ६

த்ரிலோசனம் த^{3}ஶபு^{4}ஜம் து^{3}ர்கா^{3}தே^{3}ஹார்த^{4}தா^{4}ரிணம்।
விபூ^{4}த்யப்^{4}யர்சிதம் தே^{3}வம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : முக்கண்ணரும்-பத்துக்கைகளை உடையவரும்- பார்வதியைப் பாதி தேகத்தில் கொண்டவரும்-விபூதியால் பூசப்பட்ட சரீரத்தை உடையவருமான மஹாதேவரை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7

𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌧𑌾𑌰𑌿𑌣𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑌾𑌗𑌾𑌭𑌰𑌣𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌮𑍍 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 7॥

त्रिशूलधारिणं देवं नागाभरणसुन्दरम्।
चन्द्रशेखरमीशानं एकबिल्वं शिवार्पणम् ॥ ௭

த்ரிஶூலதா^{4}ரிணம் தே^{3}வம் நாகா^{3}ப^{4}ரண ஸுந்த^{3}ரம்।
சந்த்^{3}ரசேக^{2}ரமீஶானம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : சூலாயுதத்தைக் கையில் ஏந்தியவரும், பிரகாசிப்பவரும், பாம்பு அணிகளால் அழகானவருமான சந்திரசேகரரை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8

𑌗𑌙𑍍𑌗𑌾𑌧𑌰𑌾𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌨𑌾𑌥𑌂 𑌫𑌣𑌿𑌕𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑌾𑌲𑌕𑌾𑌲𑌂 𑌗𑌿𑌰𑌿𑌶𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 8॥

गङ्गाधराम्बिकानाथं फणिकठडलमण्डितम्।
कालकालं गिरीशं च एकबिल्वं शिवार्पणम् ॥ ८

க^{3}ங்கா^{3}த^{4}ராம்பி^{3}கானாத^{2}ம் ப^{2}ணிகுண்ட^{3}லமண்டி^{3}தம்।
காலகாலம் கி^{3}ரீஶம் ச ஏகபி^{3}ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : கங்கையைத் தலையில் வைத்திருப்பவரும், சிவகாம ஸுந்தரியின் மணாளரும், ஸர்ப்பங்களை அணியாகக் கொண்டவரும், யமனுக்கும் யமனாக உள்ளவரும், கைலாஸம், மேரு, மந்த்ரம் முதலிய மலைகளுக்குத் தலைவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9

𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌫𑌟𑌿𑌕 𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌂 𑌶𑌿𑌤𑌿𑌕𑌣𑍍𑌠𑌂 𑌕𑍃𑌪𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌸𑌦𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 9॥

शुद्धस्फटिक संकाशं शितिकण्ठं कृपानिधिम्।
सर्वेश्वरं सदाशान्तं एकबिल्वं शिवार्पणम् ॥ ९

ஶுத்³த⁴ஸ்ப²டிக ஸங்காஶம் ஶிதிகண்ட²ம் க்ரு'பாநிதி⁴ம்।
ஸர்வேஶ்வரம் ஸதா³ ஶாந்தம் ஏகபி³ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : தூய்மையான ஸ்படிகம் போன்ற வெண்ணிற மேனி உடையரும், விஷத்தினால் கறுத்த கழுத்தை உடையவரும், கருணைக் கடலும், எப்பொழுதும் சாந்த ஸ்வரூபியுமான ஸர்வேச்வரனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(10)

𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍 ।
𑌵𑌾𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌚𑌿𑌦𑌾𑌕𑌾𑌶𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 10॥

सच्चिदानन्दरूपं च परानन्दमयं शिवम्।
वागीश्वरं चिदाकाशं एकबिल्वं शिवार्पणम् ॥ १०

ஸச்சிதா^{3}னந்த^{3}ரூபம் ச பரானந்த^{3}மயம் ஶிவம்।
வாகீ^{3}ஶ்வரம் சிதா^{3}காஶம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : மூன்று காலத்திலும் அழிவற்றதாயும் ஞானவடிவமாயும் சுகரூபமாயும் உள்ள வடிவுள்ளவரும், பிரும்மானந்த ஸ்வரூபரும், கலைகளுக்குத் தலைவரும், ஞானாகாச ஸ்வரூபமான சிதம்பரேசரை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(11)

𑌶𑌿𑌪𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌕𑍈𑌲𑌾𑌸𑌾𑌚𑌲𑌵𑌾𑌸𑌿𑌨𑌮𑍍 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌬𑌾𑌹𑍁𑌂 𑌸𑍇𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 11॥

शिपिविष्टं सहस्राक्षं कैलासाचलवासिनम्।
हिरण्यबाहुं सेनान्यं एकबिल्वं शिवार्पणम् ॥ ११

ஶிபிவிஷ்டம் ஸஹஸ்ராக்ஷம் கைலாஸாசலவாஸினம்।
ஹிரண்யபா³ஹும் ஸேனான்யம் ஏகபி³ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : பசுக்களுக்குப் பதியும், ஆயிரம் கண்களை உடையவரும், லோக பிரஸித்தமான மஹிமையை உடையவரும், கையில் கத்தி ஏந்தியவரும், தங்கமயமான கைகளை உடையவரும், சேனைகளுக்குத் தலைவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(12)

அருணம் வாமநம் தாரம் வாஸ்தவ்யம் சைவ வாஸ்தவம் ।
ஜ்யேஷ்டம் கநிஷ்டம் கௌரீஶம் ஏகபில்வம் ஶிவார்பணம் ॥ 12॥

अरुणं वामनं तारं वास्तव्यं चैव वास्तवम्।
ज्येष्ठं कनिष्ठं गौरीशं एकबिल्वं शिवार्पणम् ॥ १२

அருணம் வாமனம் தாரம் வாஸ்தவ்யம் சைவ வாஸ்தவம்।
ஜ்யேஷ்டம் கனிஷ்ட^{2}ம் கௌ^{3}ரீஶம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : சிவந்த மேனியுள்ளவரும் சிறிய அவயவங்களை உடையவரும், ஸம்ஸாரக்கடலிலிருந்து மக்களை விடுவிப்பவரும், பசு குதிரை முதலிய பிராணிகளில் இருப்பவரும், வீடு கட்டத்தகுந்த இடத்தைப் பாதுகாப்பவரும், எல்லோருக்கும் மூத்தவரும், எப்பொழுதும் வாலிபப் பருவத்துடனேயே தோற்றமளிப்பவரும், அந்தந்த க்ஷேத்திரங்களில் தீர்த்த ரூபமாக இருப்பவருமான சிவனை குறித்து ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(13) 𑌹𑌰𑌿𑌕𑍇𑌶𑌂 𑌸𑌨𑌨𑍍𑌦𑍀𑌶𑌂 𑌉𑌚𑍍𑌚𑍈𑌰𑍍𑌘𑍋𑌷𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌅𑌘𑍋𑌰𑌰𑍂𑌪𑌕𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 13॥

हरिकेशं सनन्दीशं उच्चैर्घोषं सनातनम्।
अघोररूपकं कुम्भं एकबिल्वं शिवार्पणम् ॥ १३

ஹரிகேஶம் ஸனந்தீ³ஶம் உச்சைர்கோ⁴ஷம் ஸனாதனம்।
அகோ⁴ரரூபகம் கும்ப⁴ம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : நரையற்ற தலைமயிரை உடையவரும், ஜன சஞ்சாரமற்ற இடுகாட்டிற்குத் தலைவரும், உரத்தகுரலை உடையவரும், மிகப்பழமையானவரும், பிரளய காலத்தில் மிகப்பயங்கரமான உருவம் உள்ளவரும் (சிவனின் 5 முகங்களில் தென் முகத்திற்கு அகோரம் என்று பெயர்) சாந்தமான முகம் உள்ளவரும், மிகச் சிறந்தவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(14) பூர்வஜாவரஜம் யாம்யம் ஸூக்ஷ்மம் தஸ்கரநாயகம் ।
நீலகண்டம் ஜகன்யம் ச ஏகபில்வம் ஶிவார்பணம் ॥ 14॥

पूर्वजावरजं याम्यं सूक्ष्मं तस्करनायकम्।
नीलकण्ठं जघन्यं च एकबिल्वं शिवार्पणम् ॥ १४

பூர்வஜாவரஜம் யாம்யம் ஸூக்ஷ்மம் தஸ்கரனாயகம்।
நீலகண்ட²ம் ஜக⁴ன்யம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : உலகம் ஏற்படுவதற்கு முன் ஏற்பட்டவரும், உலகம் அழியும் காலத்தில் காலாக்னிரூபமாக இருப்பவரும், யமலோகத்தில் இருப்பவரும், மிகவும் நுட்பமாக அறியத்தகுந்தவரும், திருடர்களுக்குத் தலைவரும், கறுத்த கழுத்தை உடையவரும், பசு முதலியவற்றின் பின்பக்கத்தில் தோன்றிய கன்று முதலிய சொரூபமாக இருப்பவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தைஅளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(15) 𑌸𑍁𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌵𑌿𑌷𑌹𑌰𑌂 𑌵𑌰𑍍𑌮𑌿𑌣𑌂 𑌚 𑌵𑌰𑍂𑌥𑌿𑌨𑌮𑍍
𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑌂 𑌮𑌹𑌾𑌵𑍀𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 ॥ 15॥

सुराश्रयं विषहरं वर्मिणं च वरूधिनम्।
महासेनं महावीरं एकबिल्वं शिवार्पणम् ॥ १५

ஸுராஶ்ரயம் விஷஹரம் வர்மிணம் ச வரூதி⁴னம்।
மஹாஸேனம் மஹாவீரம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : தேவர்களுக்கு அடைக்கலம் அளிப்பவரும், விஷத்தைப் போக்குபவரும், கவசத்தை அணிந்தவரும், தேர்ப்பாகனைக் காப்பாற்றக்கூடிய இடத்தை உடையவரும், அதிக சேனைகளோடு கூடியவரும், சிறந்த வீருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(16) 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌕𑍂𑌪𑍍𑌯𑌂 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌞𑍍𑌚 𑌮𑌹𑌾𑌰𑌥𑌮𑍍 ।
𑌤𑍌𑌰𑍍𑌯𑌾𑌤𑍌𑌰𑍍𑌯𑌂 𑌚 𑌦𑍇𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 16॥

कुमारं कुशलं कूप्यं वदान्यंञ्च महारथम्।
तौर्यातौयं च देव्यं च एकबिल्वं शिवार्पणम् ॥ १६

குமாரம் குஶலம் கூப்யம் வதா³ன்யஞ்ச மஹாரத²ம்।
தௌர்யாதௌர்யம் ச தே³வ்யம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : குழந்தை உருவம் உள்ளவரும், திறமை வாய்ந்தவரும், சிதம்பரத்தில் பரமானந்த கூபம் முதலிய கிணற்றில் வஸிப்பவரும், கொடையாளியும், மஹாரதரும் (பதினாயிரம் வில்லாளிகளுடன் தனித்து நின்று போர் புரிபவர்), நதியின் அக்கரையில் இருப்பவரும், நதியின் இக்கரையில் இருப்பவரும் தேவலோகத்தில் வஸிப்பவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(17)

𑌦𑌶𑌕𑌰𑍍𑌣𑌂 𑌲𑌲𑌾𑌟𑌾𑌕𑍍𑌷𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌃 ।
𑌅𑌶𑍇𑌷𑌪𑌾𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌃 ॥ 17॥

दशकर्णं ललाटाक्षं पञ्चवक्त्रं सदाशिवम्।
अशेषपापसंहारं एकबिल्वं शिवार्पणम् ॥ १७

த³ஶகர்ணம் லலாடாக்ஷம் பஞ்சவக்த்ரம் ஸதா³ஶிவம்।
அஶேஷபாபஸம்ஹாரம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : பத்து காதுகளை உடையவரும், நெற்றியில் கண்ணை உடையவரும், ஐந்து முகங்களை உடையவரும், எப்பொழுதும் மங்களத்தை அளிப்பவரும், எல்லா பாபங்களையும் போக்குபவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(18)

𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌜𑌗𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌦𑍀𑌨𑌨𑌾𑌥𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 18॥

नीलकण्ठं जगद्वन्द्यं दीननाथं महेश्वरम्।
महापापसंहरं एकबिल्वं शिवार्पणम् ॥ १८

நீலகண்ட^{2}ம் ஜக^{3}த்^{3}வந்த்^{3}யம் தீ^{3}ன்னாத^{2}ம் மஹேப்ஶ்வரம்।
மஹாபாபஸம்ஹரம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : நீலகண்டரும், உலகமக்களால் வணங்கத் தகுந்த வரும், பூமிக்கு நாயகரும், சிறந்த கடவுளும், மஹாபாபங்களைப் போக்கடிப்பவருமான சம்புவை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(19)

ചൂഡാമണീകൃതവിഭും വലയീകൃതവാസുകിം ।
കൈലാസവാസിനം ഭീമം ഏകബില്വം ശിവാർപണം ॥ 19॥

चूडामणीकृतविभुं वलयीकृतवासुकिम्।
कैलासवासिनं भीमं एकबिल्वं शिवार्पणम् ॥ १९

சூடா³மணீக்ரு'தவிபு⁴ம் வலயீக்ரு'தவாஸுகிம்।
கைலாஸவாஸினம் பீ⁴மம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : சந்திரனை சிரசில் அணியாகக் கொண்டவரும், வாசுகி என்னும் பாம்பைக் கையில் வளையலாக அணிந்தவரும், கைலாஸத்தில் வஸிப்பவரும், துஷ்டர்களுக்குப் பயங்கரமானவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(20)

𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌕𑍁𑌨𑍍𑌦𑌧𑌵𑌲𑌂 𑌨𑌰𑌕𑌾𑌰𑍍𑌣𑌵𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ।
𑌕𑌰𑍁𑌣𑌾𑌮𑍃𑌤𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 20॥

कर्पूरकुन्दधवलं नरकार्णवतारकम्।
करुणामृतसिन्धुं च एकबिल्वं शिवार्पणम् ॥ २०

கர்பூரகுந்த3த4வலம் நரகார்ணவதாரகம்।
கருணாம்ரு'தஸிந்து4ம் ச ஏகபி3ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : பச்சைக் கற்பூரம் முல்லை மலர் போல் வெண்ணிற மேனி உடையவரும், நரகமாகிற கடலிலிருந்து தாண்டுவிப்பவரும், கருணையாகிற அமிர்தத்திற்குக் கடலுமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(21)

ஊஹாடெவம் ஊஹாத்மாநம் ஹுஜஜ்ஞாயிவகஜ்ஜணீ ।
ஊஹாவாவஹாரம் டெவம் ஏகவில்வம் ஶிவாவூணீ ॥ 21॥

महादेवं महात्मानं भुजङ्गाधिपकङ्कणम्।
महापापहरं देवं एकबिल्वं शिवार्पणम् ॥ २१

மஹாதே^{3}வம் மஹாத்மானம் பு^{4}ஜங்கா^{3}தி^{4}பகங்கணம்।
மஹாபாபஹரம் தே^{3}வம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : எல்லாப் பிராணிகளிடத்திலும் சமபுத்தியுள்ளவரும், ஆதிசேஷனைக் கையில் தோடாவாக அணிந்திருப்பவரும், பிர்ம்மஹத்தி முதலியமஹா பாபங்களைப் போக்குகிறவருமான மஹாதேவரை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(22) 𑌭𑍂𑌤𑍇𑌶𑌂 𑌖𑌣𑍍𑌡𑌪𑌰𑌶𑍁𑌂 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌂 𑌪𑌿𑌨𑌾𑌕𑌿𑌨𑌮𑍍 ।
𑌵𑌾𑌮𑍇 𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 22॥

भूतेशं खण्डपरशुं वामदेवं पिनाकिनम्।
वामे शक्तिधरं श्रिष्ठं एकबिल्वं शिवार्पणम् ॥ २२

பூ⁴தேஶம் க²ண்ட³-பரஶூம் வாமதே³வம் பினாகினம்।
வாமே ஶக்தித⁴ரம் ஶ்ரேஷ்ட²ம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : பூதங்களுக்குத் தலைவரும், கஜாஸுரவதத்தில் ஒடிந்த கோடரியை உடையவரும், வாமதேவரும் (சிவனின் ஐந்து முகங்களில் வடக்கு முகத்திற்கு வாமதேவம் என்று பெயர்) பினாகம் என்னும் வில்லைக் கையில் ஏந்தியவரும், இடது புறத்தில் சக்தியான அம்பிகையை உடையவரும் (அர்த்தநாரீச்வரர்), மிகச் சிறந்தவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

(23)

𑌫𑌾𑌲𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌂 𑌶𑍍𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑌂 𑌭𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌮𑍍 ।
𑌨𑍀𑌲𑌲𑍋𑌹𑌿𑌤𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 ॥ 23॥

फालेक्षणं विरूपाक्षं श्रीकण्ठं भक्तवत्सलम्।
नीललोहितखट्वाङ्गं एकबिल्वं शिवार्पणम् ॥ २३

பா2லேக்ஷணம் விரூபாக்ஷம் ஶ்ரீகண்ட2ம் ப4க்தவத்ஸலம் ।
நீலலோஹிதக2ட்வாங்க3ம் ஏகபி3ல்வம் ஶிவார்ப்பணம் ॥

(இ-ள்) : நெற்றியில் நெருப்பைக் கண்ணாக உடையவரும் மூன்று கண்களை உடையவரும், விஷத்தைக் கழுத்தில் உடையவரும், பக்தர்களிடத்தில் அன்பு கொண்டவரும், கழுத்தில் கறுப்பும் உடலில் பவழம்போல் சிவப்பு நிறம் வாய்ந்தவரும், கட்டிலின் காலைக் கையினில் கொண்டவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

24

𑌕𑍈𑌲𑌾𑌸𑌵𑌾𑌸𑌿𑌨𑌂 𑌭𑍀𑌮𑌂 𑌕𑌠𑍋𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 ।
𑌵𑍃𑌷𑌾𑌙𑍍𑌕𑌂 𑌵𑍃𑌷𑌭𑌾𑌰𑍂𑌢𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 ॥ 24॥

कैलासवासिनं भीमं कठोरं त्रिपुरान्तकम्।
वृषाङ्कं वृषभारूढं एकबिल्वं शिवार्पणम् ॥ २४

கைலாஸவாஸினம் பீ⁴மம் கடோ²ரம் த்ரிபுராந்தகம்।
வ்ரு’ஷாங்கம் வ்ரு’ஷபா⁴ரூட⁴ம் ஏகபி³ல்வம் ஶிவார்பணம்॥

(இ-ள்) : வெள்ளியங்கிரியில் வசிப்பவரும், பயங்கரமானவரும், குரூரமானவரும், த்ரிபுராஸூரனை அழித்தவரும், காளையை அடையாளமாகக் கொண்ட கொடியை உடையவரும், தர்ம ஸ்வரூபமான காளையின் மேல் வீற்றிருப்பவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

(25) 𑌸𑌾𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌯𑌂 𑌭𑌸𑍍𑌮𑍋𑌦𑍍𑌧𑍂𑌳𑌿𑌤𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 ।
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌞𑍍𑌜𑌯𑌂 𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 ॥ 25॥

सामप्रियं सर्वमयं भस्मोद्धूलितविग्रहम्।
मृत्युञ्जयं लोकनाथं एकबिल्वं शिवार्पणम् ॥ २५

ஸாமப்ரியம் ஸர்வமயம் ப⁴ஸ்மோத்³தூ⁴ளிதவிக்³ரஹம்।
ம்ருத்யுஞ்ஜயம் லோகனாத²ம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : ஸாமவேதத்தில் பிரியம் கொண்டவரும், குரலாய் இருப்பவரும், உடல் முழுவதும் விபூதி பூசியவரும், யமனை வென்றவரும், பதினான்கு உலகங்களுக்குத் தலைவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ்பில்வத்தை அளிக்கின்றேன்.

(26)

𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌦𑍁𑌃𑌖𑌹𑌰𑌣𑌂 𑌰𑌵𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑌲𑍇𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌮𑍃𑌗𑌪𑌾𑌣𑌿𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌳𑌿𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 26॥

दरिद्रदुःखहरणं रविचन्द्रानलेक्षणम्।
मृगपाणिं चन्द्रमौळिं एकबिल्वं शिवार्पणम् ॥ २६

தா3ரித்3ர்யது:3க2ஹரணம் ரவிசந்த்3ரானலேக்ஷணம்।
ம்ரு'க3பாணிம் சந்த்3ரமௌளிம் ஏகபி3ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : தரித்ரர்களுடைய துக்கத்தைப் போக்குபவரும், ஸூர்யன், சந்திரன், அக்னி இவர்களைக் கண்களாகக் கொண்டவரும், மானைக் கையில் வைத்திருப்பவரும், சந்திரனை சிரஸில் கொண்டவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage Foundation of America HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(27)

𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌭𑌯𑌾𑌕𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌕𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌾𑌕𑌾𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 27॥

सर्वलोकभयाकारं सर्वलोकैकसाक्षिणम्।
निर्मलं निर्गुणाकारं एकबिल्वं शिवार्पणम् ॥ २७

ஸர்வலோகப^{4}யாகாரம் ஸர்வலோகைகஸாக்ஷிணம்।
நிர்மலம் நிர்கு^{3}ணாகாரம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : அனைத்துலகத்திற்கும் அச்சத்தை அளிக்கும் உருவம் கொண்டவரும், அனைத்துலகிற்கும் புண்ய பாபங்களைக் கண்கூடாகப் பார்க்கும் ஒரே கடவுளும், தூய்மையானவரும், ரஜோகுண தமோகுணம் அற்றவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(28) 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌸𑌾𑌮𑍍𑌬𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑍂𑌰𑌕𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 28॥

सर्वतत्त्वात्मकं साम्बं सर्वतत्त्वविदूरकम्।
सर्वतत्त्वस्वरूपं च एकबिल्वं शिवार्पणम् ॥ २८

ஸர்வதத்த்வாத்மகம் ஸாம்ப^{3}ம் ஸர்வதத்வவிதூ^{3}ரகம்।
ஸர்வதத்த்வஸ்வரூபம் ச ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : எல்லா தத்வங்களாக இருப்பவரும், உமையுடன் கூடியவரும், எல்லா தத்வங்களுக்கும் அப்பாற்பட்டவரும், எல்லா தத்வங்களால் நன்கு எடுத்துக்காட்டப்படுபவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)

29

𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌗𑍁𑌰𑍁𑌂 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌵𑌰𑌪𑍍𑌰𑌦𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌕𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 29॥

सर्वलोकगुरुं स्थाणुं सर्वलोकवरप्रदम्।
सर्वलोकैकनेत्रं च एकबिल्वं शिवार्पणम् ॥ २९

ஸர்வலோககு³ரும் ஸ்தா²ணும் ஸர்வலோகவரப்ரத³ம்।
ஸர்வலோகைகனேத்ரம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : அனைத்துலகிற்கும் குருவும், சலிக்காமல் இருப்பவரும், பதினான்கு உலகங்களுக்கும் வேண்டிய வரங்களை அளிப்பவரும், அனைத்துலகத்தையும் பிரகாசிக்கச் செய்பவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

P3

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

30

𑌮𑌨𑍍𑌮𑌥𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌣𑌂 𑌶𑍈𑌵𑌂 𑌭𑌵𑌭𑌰𑍍𑌗𑌂 𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।
𑌕𑌮𑌲𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌪𑍂𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 30॥

मन्मथोद्धारणं शैवं भवभर्गं परात्मकम्।
कमलाप्रियपूज्यं च एकबिल्वं शिवार्पणम् ॥ ३०

மன்மதோ²த்³த⁴ரணம் ஶைவம் ப⁴வப⁴ர்க³பராத்மகம்।
கமலாப்ரியபூஜ்யம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : காமனைவென்றவரும், மங்கள உருவம் கொண்டவரும், அனைத்துலகின் தோற்றத்திற்குக் காரணமாய் உள்ளவரும், சூரியனின் நடுவில் வழிபடத்தக்கவரும், விஷ்ணுவினால் பூஜிக்கப்படுபவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(31)

𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌂 𑌮𑌹𑌾𑌭𑍀𑌮𑌂 𑌉𑌮𑍇𑌶𑌂 𑌭𑌸𑍍𑌮𑌲𑍇𑌪𑌨𑌂 ।
𑌭𑌵𑌰𑍋𑌗𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 ॥ 31॥

तेजोमयं महाभीमं उमेशं भस्मलेपनम्।
भवरोगविनाशं च एकबिलवं शिवार्पणम्।। ३१

தேஜோமயம் மஹாபீ⁴மம் உமேஶம் ப⁴ஸ்மலேபனம்।
ப⁴வரோக³வினாஶம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்।।

(இ-ள்) : ஒளிவடிவமானவரும், மிக பயங்கரமானவரும், மன்மதனை எரித்த சாம்பலைப் பூசிக் கொண்டிருப்பவரும், உலக வாழ்க்கையாகிற பிணியைப் போக்குபவருமான சிவனை நோக்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

(32)

𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌫𑌲𑌦𑌂 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌵𑌰𑌪𑍍𑌰𑌦𑌮𑍍 ।
𑌨𑌗𑌰𑌾𑌜𑌸𑍁𑌤𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 ॥ 32॥

स्वर्गापवर्गफलदं रघुनाथवरप्रदम्।
नगराजसुताकान्तं एकबिल्वं शिवार्पणम् ॥ ३२

ஸ்வர்கா3பவர்க3ப2லத3ம் ரகு4னாத2வரப்ரத3ம்।
நக3ராஜஸுதாகாந்தம் ஏகபி3ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : ஸ்வர்கம், மோக்ஷம் ஆகிய பலனை அளிப்பவரும், ராமருக்கு வரம் அளித்தவரும், மலைமகளான பார்வதியின் நாயகருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

(33)

𑌮𑌞𑍍𑌜𑍀𑌰𑌪𑌾𑌦𑌯𑍁𑌗𑌲𑌂 𑌶𑍁𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌫𑌣𑌿𑌰𑌾𑌜𑌵𑌿𑌰𑌾𑌜𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 33॥

मञ्जीरपादयुगलं शुभलक्षणलक्षितम् ।
फणिराजविराजं च एकबिल्वं शिवार्पणम् ॥ ३३

மஞ்ஜீரபாத³யுக³லம் ஶுப⁴லக்ஷணலக்ஷிதம்।
ப²ணிராஜவிராஜம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : ஒலிக்கின்ற பாதசரத்தோடுகூடிய பாதங்களையுடையவரும், மங்களசின்னங்களோடு கூடியவரும் ஸர்பச்ரேஷ்டங்களால் பிரகாசிப்பவருமான சிவனை, வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(34)

𑌨𑌿𑌰𑌾𑌮𑌯𑌂 𑌨𑌿𑌰𑌾𑌧𑌾𑌰𑌂 𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌂 𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑍍 ।
𑌤𑍇𑌜𑍋𑌰𑍂𑌪𑌂 𑌮𑌹𑌾𑌰𑍌𑌦𑍍𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 34॥

निरामयं निराधारं निस्सङ्गं निष्प्रपञ्चकम्।
तेजोरूपं महारौद्रं एकबिल्वं शिवार्पणम् ॥ ३४

நிராமயம் நிராதா⁴ரம் நிஸ்ஸங்க³ம் நிஷ்ப்ரபஞ்சகம்।
தேஜோரூபம் மஹாரௌத்³ரம் ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : பிணியற்றவரும், ஆதாரமற்றவரும், தொடர்பற்றவரும், பிரபஞ்ச வாஸனையற்றவரும், ஒளிமயமானவரும், மிக பயங்கரமானவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

35

𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌕𑌪𑌿𑌤𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌕𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍈𑌕𑌨𑌾𑌥𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 35॥

सर्वलोकैकपितरं सर्वलोकैकमातरम्।
सर्वलोकैकनाथं च एकबिल्वं शिवार्पणम्।। ३५

ஸர்வலோகைகபிதரம் ஸர்வலோகைகமாதரம்।
ஸர்வலோகைகநாத²ம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்।।

(இ-ள்) : அனைத்துலகிற்கும் தாயும் தந்தையுமானவரும் அனைத்துலகிற்கும் ஒரே தலைவருமான பரமசிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

(36)

𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌨𑌿𑌰𑌾𑌭𑌾𑌸𑌂 𑌵𑍃𑌷𑌭𑍇𑌶𑍍𑌵𑌰𑌵𑌾𑌹𑌨𑌮𑍍 ।
𑌨𑍀𑌲𑌗𑍍𑌰𑍀𑌵𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 36॥

चित्राम्बरं निराभसं वृषभेश्वरवाहनम्।
नीलग्रीवं चतुर्वक्त्रं एकबिल्वं शिवार्पणम्।। ३६

சித்ராம்ப^{3}ரம் நிராபா^{4}ஸம் வ்ரு’ஷபே^{4}ஶ்வரவாஹனம்।
நீலக்^{3}ரீவம் சதுர்வக்த்ரம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்।।

(இ-ள்) : அனேக நிறம் உள்ள ஆடையை அணிந்தவரும், ஞானத்தால் நன்கு விளங்குபவரும், காளையை வாஹனமாகக் கொண்டவரும், கறுத்த கழுத்தை உடையவரும், நான்கு முகங்களை உடையவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

(37)

𑌰𑌤𑍍𑌨𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌰𑌤𑍍𑌨𑍇𑌶𑌂 𑌰𑌤𑍍𑌨𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑌵𑌰𑌤𑍍𑌨𑌕𑌿𑌰𑍀𑌟𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 37॥

रत्नकञ्चुकरत्नेशं रत्नकुण्डलमण्डितम्।
नवरत्नकिरीटं च एकबिलवं शिवार्पणम्।। ३७

ரத்னகஞ்சுகரத்னேஶம் ரத்னகுண்ட³ல மண்டி³தம்।
நவரத்னகிரீடம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்॥

(இ-ள்) : வைரஅங்கி அணிந்தவரும், ரத்னங்களுக்குத் தலைவரும், ரத்ன குண்டலங்களை அணிந்தவரும், நவரத்ன கிரீடம் வைத்துக் கொண்டு இருப்பவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

38

𑌦𑌿𑌵𑍍𑌯𑌰𑌤𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 𑌕𑌣𑍍𑌠𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑌾𑌨𑌾𑌰𑌤𑍍𑌨𑌮𑌣𑌿𑌮𑌯𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 38॥

दिव्यरत्नाङ्गुलीस्वर्ण कण्ठाभरणभूषितम्।
नानारत्नंमणिमयं एकबिल्वं शिवार्पणम्।। ३८

தி^{3}வ்யரத்னாங்கு^{3}லீஸ்வர்ணம் கண்டா^{2}ப^{4}ரணபூ^{4}ஷிதம்।
நானாரத்னமணிமயம் ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்।।

(இ-ள்) : சிறந்த ரத்னமோதிரம் ரத்னக்கடுக்கன் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், பலவகையான ரத்னங்களை அணியாகக் கொண்டவரும், மணிகளால் விளங்குபவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

(39)

𑌰𑌤𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌯𑌵𑌿𑌲𑌸𑌤𑍍𑌕𑌰𑌶𑌾𑌖𑌾𑌨𑌖𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑌗𑍇𑌹𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 39॥

रत्नाङ्गुलीयविलसत्करशाखानखप्रभम्।
भक्तमानसगेहं च एकबिल्वं शिवार्पणम्।। ३९

ரத்னாங்கு³லீயவிலஸத்கரஶாகா²னக²ப்ரப⁴ம்।
ப⁴க்தமானஸகே³ஹம் ச ஏகபி³ல்வம் ஶிவார்ப்பணம்।।

(இ-ள்) : ரத்தின மோதிரங்களால் பிரகாசிக்கின்ற கைவிரல்களிலுள்ள நககாந்தியை உடையவரும், பக்தர்களின் உள்ளத்தில் வஸிப்பவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

(40)

𑌵𑌾𑌮𑌾𑌙𑍍𑌗𑌭𑌾𑌗𑌵𑌿𑌲𑌸𑌦𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ।
𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌨𑌿𑌭𑌾𑌕𑍍𑌷𑌂 𑌚 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 40॥

वामाङ्गभागविलसदम्बिकावीक्षणप्रियम्।
पुण्डरीकनिभाक्षं च एकबिल्वं शिवार्पणम्।। ४०

வாமாங்க^{3}பா^{4}க^{3}விலஸத^{3}ம்பி^{3}காவீக்ஷணப்ரியம்।
புண்ட^{3}ரீகனிபா^{4}க்ஷம் ச ஏகபி^{3}ல்வம் ஶிவார்ப்பணம்।।

(இ-ள்) : இடதுபுறத்தில் விளங்குகின்ற பார்வதியின் பார்வையில் அன்பு கொண்டவரும், தாமரை மலர்போன்ற கண்களையுடையவருமான சிவனை வணங்கி ஒரு மூவிதழ் பில்வத்தை அளிக்கின்றேன்.

(41)

𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌾𑌮𑌦𑌂 𑌸𑍌𑌖𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌟𑌫𑌲𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌦𑌂 𑌹𑌿𑌤𑌕𑌰𑌂 𑌏𑌕𑌬𑌿𑌲𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ 41॥

संपूर्णकामदं सौख्यं भक्तेष्टफलकारणम् ।
सौभाग्यदं हितकरं एकबिल्वं शिवार्पणम्।। ४१

